ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப.,

ந.க.எண்.15998/2021/பஅ2 நாள்: 27.12.2021

பொருள்: பொதுப்பணிகள்- தமிழ்நாடு அமைச்சுப்பணி -கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி அலகு- ஈரோடு மாவட்டம்- பணியில் இருக்கும் போது காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவுத் திட்டம்) திரு.(லேட்).ஆ.ஈஸ்வரமூர்த்தி என்பவரின் மகன் திரு.ஈ.வெற்றிவேல் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடுதல் - சார்பு.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020
2. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத் (க்யூ.1) துறை, நாள்:26.02.2021
3. அரசு இணை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் கடித ந.க.எண்: 6895/இ3/2021-5, நாள்:14.12.2021
4. பவானிசாகர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கடிதம் ந.க.எண்.635/2018/அ1. நாள்.01.08.2018
5. திருமதி.ஈ.கௌரி, க.பெ.ஆ.ஈஸ்வரமூர்த்தி, (லேட்) கண்டிக்காட்டு வலசு, ஆர்டி-43, சம்பத் நகர், ஈரோடு, என்பவரது விண்ணப்பம் ,நாள்: 01.08.2018.
6. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 23234/2018/பஅ2, நாள்.04.10.2018

❁❁❁❁

**உத்தரவு:**

பணியில் இருக்கும் போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், ஈரோடு மாவட்டம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவுத் திட்டம்) ஆக பணிபுரிந்து 17.03.2018 அன்று காலமான திரு.(லேட்)ஆ.ஈஸ்வரமூர்த்தி என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.ஈ.வெற்றிவேல் என்பவருக்கு மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 06.10.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாள்ராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

Scanned with CamScanner

2. பார்வை 2-ல் காணும் அரசாணைப்படி, 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படும் எனவும், இவ்வாணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமாத்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில், "இளநிலை உதவியாளர்" பதவிக்கான பணி நியமன அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பணி நியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

4. பணியிடைக் காலமான அரசு ஊழியர் திரு(லேட்).ஆ.ஈஸ்வரமூர்த்தி என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 25.09.1999 மு.ப. முதல் வரன்முறைப்படுத்தியும், 24.09.2001 பி.ப. முதல் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

5. பார்வை 4-ல் வரப்பெற்ற முன்மொழிவு மற்றும் அசல் சான்றுகளின்படி, பணியிடைக்காலமான திரு.ஆ.ஈஸ்வரமூர்த்தி என்பவரின் நேரடி வாரிசுதாரரும் மகனுமான திரு.ஈ.வெற்றிவேல் என்பவரால் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு 01.08.2018 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அவரது பிறந்த தேதி 30.01.1996. பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனிரது வயது 22 ஆகும். அவர் இடைநிலைக் கல்வி இறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் இல்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது. தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குரிய உடற்தகுதி சான்று Civil Assistant Surgeon நிலைக்கு குறையாத மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்று சமர்பிக்கப்பட்டுள்ளது.

6. பார்வை 1-ல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி திரு.ஈ.வெற்றிவேல் என்பவரது அசல் ஆவணங்கள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு தனியருக்கு 06.10.2018 மு.ப முதல் கருணை அடிப்படையில் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது. தனியர் பணி நியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளான 06.10.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து

Scanned with CamScanner

உத்தரவிடப்படுகிறது. தனியரது பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற தகுதியுடையவராகிறார்.

7. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட திரு.ஈ.வெற்றிவேல் என்பவரின் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்பட்ட விபரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/ ஹெச்.கிருஷ்ணனுண்ணி
மாவட்ட ஆட்சித்தலைவர்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

//உண்மைநகல் உத்தரவுப்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம், ஈரோடு

27/12/2021

**பெறுதல்:**

திரு.ஈ.வெற்றிவேல்
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்(வளர்ச்சிப் பிரிவு)
ஈரோடு மாவட்டம், ஈரோடு
(அலுவலக தலைவர் மூலமாக)

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-15
நகல்: பஅ3 மற்றும் பஅ2 இருப்புக் கோப்பிற்கு.
(உபரி -2).

---

மா.ஆ.நே.அலுவலகம் (வ.பி.)
ஈரோடு.

ந.க.எண் .024/2022/பஅ3 நாள் 3 01.2022

-அனுப்பப்படுகிறது-

நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
ஈரோடு மாவட்டம், ஈரோடு.
3.1.2022

பெறுநர்:-
திரு.ஈ..வெற்றிவேல்,
இளநிலை உதவியாளர்,
மா.ஆ.நே.அலுவலகம் (வ.பி.)
ஈரோடு.

Scanned with CamScanner